இருதய பைபாஸ் அறுவை சிகிச்சையில் இருதயத்தை நிறுத்தி, பின்னர் துடிக்க வைத்து செய்வது, அதேபோல், இருதயம் துடிக்கும்போதே செய்யும் அறுவை சிகிச்சை என ஒவ்வொரு அறுவை சிகிச்சைக்கும் தனித்தனியே மயக்க மருந்து கொடுப்போம். தற்போது நவீன முறையில் சிறு துளை மூலமாக ஒரு நுரையீரலை வேலை செய்யாமல் நிறுத்தி, மற்றொன்றின் மூலமாக இருதய அறுவை சிகிச்சை செய்கிறோம். இதற்கு கொடுக்கும் மயக்க மருந்தும் வேறு.

அறுவை சிகிச்சைக்கு முன் ஒவ்வொரு நோயாளியின் நெருங்கிய உறவினர்களிடமும் நோயாளியின் உணவு முறை, புகைப்பிடித்தல், இரத்த அழுத்தம், சர்க்கரை போன்றவை குறித்து கலந்து ஆலோசிப்போம். பின்னர், மயக்க மருந்து கொடுக்கும் முறை, உணவு முறை பற்றி அவர்களுக்கு விளக்கமாகச் சொல்லிக் கொடுப்போம்.

இருதய அறுவைசிகிச்சைதான் மிகவும் சிக்கல்கள் நிறைந்த ஒரு அறுவை சிகிச்சை. ஆனால் இங்கே 95 சதவீதம் எந்த ஆபத்தும் இல்லை. அதேநேரம், மீதமுள்ள 5% அழற்சி, பல் உடைதல், நு

மதிப்புமிக்க மாணவர்களை உருவாக்கும்

இந்துஸ்தான் !

✍ தி கோவை மெயில்

கோயம்புத்தூர் பகுதியில் உள்ள முன்னணி கல்வி நிறுவனங்களில் ஒன்றான இந்துஸ்தான் கல்விக் குழுமமானது இந்துஸ்தான் காலேஜ் ஆஃப் ஆர்ட்ஸ் & சயின்ஸ், இந்துஸ்தான் காலேஜ் ஆஃப் இஞ்ஜினியரிங் & டெக்னாலஜி, இந்துஸ்தான் இன்ஸ்டிட்யூட் ஆஃப் டெக்னாலஜி, இந்துஸ்தான் ஸ்கூல் ஆஃப் ஆர்கிடெக்சர், இந்துஸ்தான் பாலிடெக்னிக் காலேஜ், இந்துஸ்தான் காலேஜ் ஆஃப் எஜூகேசன், இந்துஸ்தான் காலேஜ் ஆஃப் நர்சிங், இந்துஸ்தான் காலேஜ் ஆஃப் ஹெல்த் சயின்ஸ் என்ற பெயரில் கல்லூரிகளையும் இந்துஸ்தான் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, இந்துஸ்தான் இன்டர்நேசனல் ஸ்கூல் மற்றும் கங்காரூ கிட்ஸ் என்ற பெயரில் பள்ளிகளையும் என 12 கல்வி நிறுவனங்களைத் தன் கீழ் கொண்டு கடந்த 25 வருடங்களுக்கும் மேலாக அனைத்துத் தரப்பு மக்களுக்கும் சிறப்பானதொரு கல்விச் சேவையை வழங்கி வருகிறது.

சரஸ்வதி கண்ணையன்,
நிர்வாக அறங்காவலர், இந்துஸ்தான் கல்வி மற்றும் அறக்கட்டளை

இந்தக் கல்வி நிறுவனங்களின் சிறப்பம்சம் என்னவென்றால் தன்னாட்சி பெற்ற கல்லூரிகளாகத் தகுதி பெற்று, நாட்டின் முன்னணித் தொழில் நிறுவனங்களுடன் ஒப்பந்தங்கள் செய்து, தொழில் துறை வல்லுநர்களின் பங்களிப்போடு மாணவர்களுக்கான பாடத் திட்டங்களை வடிவமைத்து இன்றைய போட்டி நிறைந்த உலகில் மாணாக்கர்களை தயார் செய்து அவர்கள் படித்து முடிக்கும் முன்பே நிறுவனங்கள் அவர்களைத் தேடி வந்து வேலையளிக்கும் வகையில் அவர்களை மதிப்பு மிக்கவர்களாக உருவாக்குகிறது.

மேலும் மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில் சர்வதேசத் தரத்திலான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி அவர்களை மெருகேற்றி அனைத்துத் துறைகளிலும் சிறந்தவர்களாக வடிவமைப்பதில் முன்னணி கல்வி நிறுவனமாக இவை விளங்கி வருகிறது. இந்தப் பகுதியில் வசிப்போர் மட்டுமின்றி நாட்டின் பிற பகுதியினைச் சார்ந்த மாணாக்கர்களின் முதன்மைத் தேர்வாக இந்துஸ்தான் கல்வி நிறுவனங்கள் திகழ்கிறதென்றால் அது மிகையில்லை.

நாட்டின் முன்னணித் தொழில் நிறுவனங்களான *TCS, IBM, Google, Microsoft, HP, Maac, Royal Enfield, Eicher* மற்றும் *CII, ICSI, ACCA* போன்ற அமைப்புகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்து, அந்த நிறுவனங்களில் பணிபுரியும் நபர்களைக் கொண்டு பாடம் நடத்தப்படுவதால் மாணவர்கள் தொழில் துறையினரின் எதிர்பார்ப்பு என்ன என்பதைத் தெரிந்து அதற்கேற்ப அவர்கள் தங்களைத் தயார் செய்து வேலை வாய்ப்பு பெறுவதில் முன்னிலை வகிக்கிறார்கள்.

மேலும் சர்வதேச அளவில் முன்னணியில் உள்ள 13க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளதால் பயிலும் போதே வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பயிற்சி பெறும் சிறப்பான ஒரு சூழலை ஏற்படுத்தித் தருகிறார்கள். பாடத்திட்டத்தில் மட்டுமன்றி, கலை, விளையாட்டு, நிர்வாகம், அறிவியல், தொழில்நுட்பம், ஆராய்ச்சி என அனைத்துத் துறைகளிலும் இந்துஸ்தான் மாணவர்கள் முத்திரை பதித்து இந்தக் கல்வி நிறுவனங்களுக்குப் பெருமை சேர்த்து வருகிறார்கள்.

கல்விக் கட்டணம் செலுத்த சிரமப்படும் தகுதி வாய்ந்த மாணாக்கர்களின் வாழ்வில் ஒளியேற்றும் விதமாக அவரவர் தகுதிக்கேற்ப இலவசமாகவோ அல்லது கட்டணச் சலுகையுடனோ அவர்களது எதிர்காலம் சிறப்பானதாக அமைய பல்வேறு திட்டங்களை தீட்டி வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி வருகிறது.

கல்வி என்பது அனைவருக்குமானது என்ற உயரிய நோக்கில் அனைத்து தரப்பினரின் உன்னதத் தேர்வாக இந்துஸ்தான் கல்வி நிறுவனங்கள் இருப்பதற்கு சான்றாக சமீபத்தில் தேசியத் தர மதிப்பீட்டு நிறுவனமான **NAAC** இந்துஸ்தான் காலேஜ் ஆஃப் ஆர்ட்ஸ் & சயின்ஸ்க்கு தமிழ்நாட்டில் செயல்படும் தனியார் சுயநிதிக் கல்லூரிகளில் சிறந்த கல்லூரியாக மதிப்பிட்டு அதிக மதிப்பெண்களுடன் **A++** அந்தஸ்தை வழங்கி சிறப்பித்துள்ளது.

மாணவர்களின் கனவை நினைவாக்கும்

கே.பி.ஆர். கல்வி நிறுவனங்கள்

✍ தி கோவை மெயில்

கே.பி.ஆர். குழுமம் ஜவுளி, சர்க்கரை, காற்றாலைகள், ஆட்டோமொபைல் மற்றும் கல்வி ஆகியவற்றில் ஆர்வமுள்ள நாட்டின் மிகப்பெரிய தொழில்துறை நிறுவனங்களில் ஒன்றாகும். இதன் இரண்டு கல்வி நிறுவனங்களும் நாட்டின் முன்னேற்றத்திற்கு உதவுகின்றன.

2009 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட கே.பி.ஆர். பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், நாட்டின் முதன்மையான நிறுவனங்களில் ஒன்றாகும். கோவை மண்டல அளவில் சர்வதேசத் தரத்துடன், செயல்திறன்மிக்க ஆராய்ச்சி நிறுவனமாக, புத்திசாலித்தனமான, உறுதியான மாணவர் சமூகம், நிலையான தொழில்நுட்பம், திறமையான நிர்வாகம், சிறந்த ஆசிரியக் குழு, புதுமையான கற்றல் நுட்பங்கள், குறிப்பிடத்தக்க ஆராய்ச்சிகள், தொழில் நிறுவனங்களுடன் கற்றல் தொடர்பு என வளமான நிறுவனமாக வளர்ந்து வருகிறது.

KPRIET, புதுமை, தொழில்முனைவு மற்றும் தொழில்துறை ஆலோசனைக்கான முன்னணி மையமாக அறியப்படுகிறது. மாணவர் கனவை நனவாக்கி, அவர்களின் அறிவைத் திரட்டுதல், சமூகப் பொறுப்புகள் மற்றும் பசுமை ஆற்றல் முன்முயற்சிகள் போன்ற சமூக நலச் செயல்பாடுகளிலும் பங்களிக்கிறது.

260 சிறந்த ஆசிரியர்கள், 3,500 மாணவர்கள், 280 நிர்வாக மற்றும் துணைப் பணியாளர்களைக் கொண்டு இயங்கும் இந்நிறுவனம், கோவை மாநகரின் புறநகர் பகுதியில் சுமார் 66 ஏக்கர் பரப்பளவில் பசுமையான சூழல், அதிநவீன ஆராய்ச்சி மையங்களைக் கொண்ட 12 கல்வித் துறைகள், ஸ்மார்ட் வகுப்பறைகள், அதிநவீன உள்கட்டமைப்புடன்கூடிய 65 ஆய்வகங்கள், வரம்பற்ற அதிவேக வயர்லெஸ் இணைய இணைப்பு, ஆடிட்டோரியங்கள், கருத்தரங்கு அரங்குகள், பெரிய களஞ்சியத்துடன்கூடிய நூலகம், மாணவர்கள், ஆசிரியர்களின் உடல், மனத் திறன்களை மேம்படுத்தும் விளையாட்டு மைதானம் மற்றும் உடற்பயிற்சிக் கூடங்கள், வீட்டுச் சூழலை நினைவுபடுத்தும் சிறந்த விடுதி என ஒரு முன்மாதிரியான தொழில்நுட்பக் கல்வி நிறுவனமாக, *KPRIET* இயங்கி வருகிறது.

மேலும், கே.பி.ஆர். குழுமத்தின் மற்றொரு கல்வி நிறுவனமான கலை, அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரி சுமார் 11 ஏக்கர் பரப்பளவில் அழகிய வளாகத்தில் அமைந்துள்ளது. கல்லூரித் தலைவர் டாக்டர் கே.பி.ராமசாமி அவர்களின் தலைமையில் கேபிஆர் அறக்கட்டளை நிறுவனத்தால் இக்கல்லூரி நடத்தப்படுகிறது.

2019 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இக்கல்லூரி, மாணவர்களுக்கு உயர்தரக் கல்வி மற்றும் வாழ்க்கைத் திறன், நாட்டிற்கும் அதற்கு அப்பாலும் சேவை செய்யும் நோக்குடன் துவங்கப்பட்டது.

கே.பி.ராமசாமி,
தலைவர், கே.பி.ஆர். கல்வி குழுமம்

KPRCAS மேலாண்மை, வணிகம் மற்றும் கணினி அறிவியல் வரிசையில் 11 *UG* பாடத் திட்டங்களை வழங்குகிறது. பாடத்திட்டத்தில் மட்டும் அல்லாமல் பல்வேறு துறைகளிலும் மாணவர்கள் தீவிரப் பயிற்சி பெறுகின்றனர். இந்தப் போட்டியுலகில் தொழில்நிறுவனங்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யும் சிறந்த பட்டதாரிகளாக உருவாக்குகிறது.

சமுதாயம் மற்றும் தேசத்தின் வளர்ச்சியில் கவனம் செலுத்தும் பொறுப்புள்ள குடிமக்களாக மாணவர்களை உருவாக்க, பண்புக் கட்டமைப்பு மற்றும் தலைமைப் பண்புகளை ஏற்படுத்துகிறது. ஏராளமான மன்றங்கள் மற்றும் கலை, அறிவியல் நிகழ்வுகள் மூலம் விளையாட்டு மற்றும் பிற கலாச்சார நடவடிக்கைகள் மாணவர் திறன் வளர்க்கின்றன.

தனது மாணவர்கள், ஊழியர்கள் மகிழ்ச்சியாக இருப்பதையும், பணிச்சூழல் ஆரோக்கியமாக இருப்பதையும், இந்த பூமி வாழ்வதற்குத் தகுந்த பாதுகாப்பான இடமாக இருப்பதையும் உறுதி செய்யும் வகையில் கே.பி.ஆர் நிர்வாகம் தொடர்ந்து உழைக்கிறது.

என்.ஜி.பி. கல்வியியல் கல்லூரியில் ஆண்டுவிழா மற்றும் விளையாட்டு விழா

நிகழ்வில் மாணவர்களிடம் உரையாற்றுகிறார் கோவை மருத்துவ மையம் மற்றும் மருத்துவமனையின் தலைவர் டாக்டர் நல்ல ஜி.பழனிசாமி. அருகில் சிறப்பு விருந்தினர் அரசு மகளிர் கல்வியியல் கல்லூரி முதல்வர் கீதா, கல்லூரியின் முதன்மை நிர்வாக அலுவலர் புவனேஸ்வரன், முதல்வர்ராமசாமி ஆகியோர்.

✍ தி கோவை மெயில்

டாக்டர் என்.ஜி.பி. கல்வியியல் கல்லூரியின் ஆண்டுவிழா மற்றும் விளையாட்டு விழா அண்மையில் கல்லூரி வளாகத்தில் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் கோவை மருத்துவ மையம் மற்றும் மருத்துவமனையின் தலைவர் டாக்டர்.நல்ல ஜி.பழனிசாமி குத்துவிளக்கேற்றி விழாவை தொடங்கி வைத்து தலைமை உரையாற்றினார். இதில் "சீர்மிகு சமுதாயத்தை உருவாக்குவதில் ஆசிரியரின் பங்கு முக்கியமானது. ஆசிரியர்கள் நேர்மையுடனும் கண்ணியத்துடன் நடந்து கொள்ள வேண்டும். ஆசிரியப் பயிற்சி பெறும் மாணவர்கள் பயிற்சி காலத்தில் நல்ல ஒழுக்கத்தை கற்றுக் கொள்ள வேண்டும்.

மாணவரிடம் ஒழுக்கப்பண்புகள் வளர்ப்பதில் கவனம் செலுத்த வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

கோவை அரசு மகளிர் கல்வியியல் கல்லூரி முதல்வர் கீதா சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, "பயிற்சி ஆசிரியர்கள் தற்காலத் தொழில் நுட்ப வளர்ச்சிக்கேற்ற கற்பித்தல் மற்றும் அதனுடைய நுணுக்கங்களை முறையாகக் கற்று கொண்டு வகுப்பறையில் பயன்படுத்த வேண்டும் எனவும், பாட அறிவு நல்லொழுக்கத்துடன் கூடிய ஆசிரியர்களாகவும் திகழ வேண்டும் என வாழ்த்தினார்.

இவ்விழாவில் கோவை மருத்துவ மைய ஆராய்ச்சி மற்றும் கல்வி அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் தவமணிதேவி பழனிசாமி, அறங்காவலர் டாக்டர். அருண் பழனிசாமி, தொழில் மேம்பாட்டு நிறுவன இயக்குனர் மதுரா பழனிசாமி, முதன்மை நிர்வாக அலுவலர் புவனேஸ்வரன் மற்றும் என்.ஜி.பி. கல்வி குழுமத்தைச் சேர்ந்த பல்வேறு கல்லூரி முதல்வர்கள், புல முதன்மையர்கள் முதலானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இக்கல்வியாண்டில் கல்லூரியில் நடைபெற்ற பல்வேறு கலை மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகள் மற்றும் ஆசிரியர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

குழந்தையின் இரைப்பையில் மேக்னெட் பால்ஸ்களை அகற்றிய பி.எஸ்.ஜி. மருத்துவமனை

✍ தி கோவை மெயில்

பி.எஸ்.ஜி. மருத்துவமனைக்கு, நான்கு வயதான பெண் குழந்தை மூன்று நாட்களாக வயிற்று வலி மற்றும் வாந்தி காரணமாக கடந்த புதன்கிழமை அழைத்து வரப்பட்டது. ஆய்வு செய்ததில், அக்குழந்தையின் இரைப்பையில் நிறைய மேக்னெட் பால்ஸ் **(Magnet balls)** இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

அவை அனைத்தும் ஒன்றுடன் ஒன்று இறுக்கமாக ஒட்டி பெரிய பந்துபோல மாறி இருந்தது. இதையடுத்து மருத்துவர்கள், முதலில் எண்டோஸ்கோபி **(Endoscopy)** முறையில் உணவுக்குழாய் வழியாக அறுவை சிகிச்சையின்றி அவற்றை அகற்ற முயற்சித்தனர். ஆனால் இறுக்கமாக ஒட்டியிருந்த அந்த மேக்னெட் பால்ஸ்களைப் பிரிக்க முடியாததால், அறுவைசிகிச்சை மூலமே அவை அகற்றப்பட்டன. குழந்தை இப்பொழுது நலமாக உள்ளது. இந்த அறுவை சிகிச்சையை மருத்துவமனையின் குழந்தைகள் நல அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் பாவை அருணாச்சலம் மற்றும் அவரது குழுவினர் சிறப்பாக செய்தனர்.

மேக்னெட் பால்ஸ் போன்ற விளையாட்டுப் பொருட்களை விழுங்கும் சம்பவங்கள் தற்போது அதிகளவில் நடந்து வருகிறது. மேக்னெட் பால்ஸ் மிகவும் சிறிதாகவும் பல வண்ணங்களிளும் வருவதால் நான்கு முதல் ஐந்து வயது குழந்தைகளுக்கும் இது ஆபத்தாகும்.

இந்த காந்தப் பொருட்கள் இரைப்பை அல்லது குடலில் ஒட்டை போடும் அபாயமும், இதனால் குழந்தையின் உயிருக்கும் ஆபத்து ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே இந்த விளையாட்டுப் பொருட்களை பெற்றோர் தவிர்ப்பது நல்லது என மருத்துவர்கள் பரிந்துரைத்தனர்.

SRI RAMAKRISHNA EDUCATIONAL INSTITUTIONS

SNR SONS TRUST

Managed by - SNR Sons Charitable Trust
Since 1970

Empowering Education Since 1983

40 YEARS

- Autonomous institutions accredited by NAAC & NBA
- Excellent placement record
- Industry focused curriculum
- Industry- Sponsored Centres of Excellence & Incubation
- Merit, Sports and Alumni scholarships
- Study abroad with foreign universities
- International alumni chapters

14 INSTITUTIONS | 21000+ STUDENTS | 3000+ FACULTY

OUR INSTITUTIONS

Sri Ramakrishna Engineering College (Autonomous) 0422 2460088	Sri Ramakrishna Institue of Technology (Autonomous) 0422 2605577	Sri Ramakrishna College of Arts & Science (Autonomous) 0422 2562788	Sri Ramakrishna College of Arts & Science for Women 0422 2243624
Sri Ramakrishna Dental College & Hospital 0422 2560381	Sri Ramakrishna Polytechnic College 0422 2461349	Sri Ramakrishna College of Pharmacy 0422 4500164	Sri Ramakrishna College of Nursing 0422 4500162
Sri Ramakrishna College of Physiotheraphy 0422 4500193	Sri Ramakrishna Institute of Allied Health Sciences 0422 2247756	Sri Ramakrishna Advanced Training Institute 0422 2461480	Sri Ramakrishna Matric.Hr.Sec School Avarampalayam 0422 2562799
	Sri Ramakrishna Central School CBSE 0422 2568666	Sri Ramakrishna Matric.Hr.Sec.School Vattamalaipalayam 0422 2461977	

No.395, Sarojini Naidu Road, Siddhapudur, Coimbatore - 641 044
SNR Sons Charitable Trust 0422 4500000 www.snrsonscharitabletrust.org

Associate partner

SASTRA DEEMED TO BE UNIVERSITY

KS ACADEMY
pathway to growth

Media partner
THE TIMES OF INDIA

ATTENTION
12TH, 11TH & 10TH
(CBSE, ICSE & SB STUDENTS)

KSA's TRANSPIRE 2023

EDUCATIONAL FAIR & EXPERT GUIDANCE *EXCLUSIVELY FOR*
COMMERCE GROUP STUDENTS

CS? USCMA? B.Com? CMA? BCA? CA? ACCA? CPA?

COIMBATORE
DATE 14th MAY 2023
VENUE The Indian Medical Association (IMA), R S Puram, Coimbatore

CHENNAI
DATE 21st MAY 2023
VENUE Kalaivanar Arangam, Triplicane, Chennai

FREE! REGISTRATION

Scan QR Code to Register

TIME : 10:00 AM to 6:00 PM

www.ksacademy.com 98844 81554 , 98843 36666

ICICI's INR Trade Streamlining

✍ The Covai Mail

ICICI Bank announced that it offers Rupee Vostro Account to enable Indian exporters and importers to pay and settle export-import transactions in Indian Rupees (INR).

The proposition reduces the foreign currency risk borne by Indian exporters and importers as they can use INR for invoicing, payment, and settlement of their transactions.

This initiative is in line with India's Foreign Trade Policy 2023 and RBI's framework for invoicing, payment, and settlement of exports/imports in INR, in addition to US Dollar, Euro and other currencies.

The Authorised Dealer (AD) banks in India can open Rupee Vostro Accounts of correspondent banks of a partner trading country to facilitate trade transactions in INR. ICICI Bank has a wide array of over 100 Rupee Vostro Accounts of correspondent banks across 29 countries including USA, Canada, UAE, Saudi Arabia, UK, Germany, and Malaysia.

Vi's Monthly Recharges: Sun NXT, SonyLIV & 2GB Data

✍ The Covai Mail

Vi has introduced two entertainment-loaded monthly recharges, to provide a binge-worthy and entertainment-filled experience for prepaid users across the country. These plans come with 1-month validity and provide unlimited calls, 100 SMS/ day, OTT benefit, and 2GB daily data.

Vi's Rs368 recharge offers prepaid users a subscription to SunNXT on TV and Mobile. The validity of telco and non-telco benefits is 30 days.

Rs369 recharge gives prepaid customers 30-day access to SonyLIV on Mobile.

This new Rs368 and Rs369 portfolio includes unique benefits such as Weekend Data Rollover of up to 200GB and Night Time Unlimited Data from 12 am – 6 am, at no extra cost.

The recharge plan additionally offers a VIP subscription to Vi MTV app.

Federation to address Apartments' issues formed

✍ The Covai Mail

The Federation of Coimbatore Apartment Associations has conducted its first meeting at Cyprus Oaks Apartment after receiving registration from Registrar Societies, Coimbatore. The Federation was formed to represent and protect the interest of the Apartments across Coimbatore.

More than 50 Apartments in Coimbatore have enrolled as its members. The Federation will take up common issues related to Apartments in the city with the Government, Judicial and Quasi Judicial Authorities.

The Federation also will facilitate sharing the best practices among its members and planning to form subcommittees to educate the Apartment communities on Environment, Health, Safety, Water conservation etc.

To ADVERTISE IN THE COVAI MAIL
84898 12341
84895 12341
covaimailads@gmail.com
report2tcm@gmail.com

THE COVAI MAIL

Disclaimer: The readers are advised to check with the authenticity of the organisations that are advertising in our newspaper before taking action in any way. The Owner and Publisher of this newspaper are not in any way responsible for the genuineness of the advertisements / advertisers and their products and services. If anybody suffers a loss or damage because of the advertisements published in this newspaper, then the owner, publisher, printer, editor and employees can be responsible under no circumstance as stated earlier.

AIC RAISE hosts G20's Startup 20X Conclave

Madhan A Sendhil, Chairman, Rathinam Groups and Nagaraj Balakrishnan, Vice president of AIC RAISE along with the Guests.

✍ The Covai Mail

AIC RAISE, a leading business incubator in India, hosted Startup20X, a G20 engagement event for the start-up ecosystem at AIC Raise, Coimbatore, recently.

The event was held under the auspices of India's presidency of the G20, and was attended by over 1000 startups, 20+ investors, and elites of the Indian business sector.

Nagaraj Balakrishnan, Vice president of AIC RAISE delivered the welcome address and followed by Startup challenge final pitch. The startups in the Future Tech, Carbon tech, Sustainable Based and Deep Tech pitched their ideas to the jury panel.

Startup20X Spotlight, sharing the story of successful entrepreneurs like Gopinath- Celebrity Anchor, Kishan Karunakaran, CEO- Buyofuel, Swathi sri, Founder- A Toddler Thing, Shanmanthy, CVO- Witty Wise, Anupa, CEO- KovaiBSF.

Some of the most prominent companies and organizations in the Indian business sector also attended the event, including Deloitte India, Vestas, 100X VC, Dassault Systems, and many others.

The conclave featured a panel discussion on the topic Start-up creation, Investor Panel (Fund to Start, Start to Fund), India at 2070 and Sustainable Indian Start-up Eco system as well as talk shows featuring some of the Incubators and a successful start-up and Angel Investors and Angel Networks.

CEO Junior and Smart Minds Hackathon winners and schools were awarded in the event.

Nearly 2500+ participants, 10+ Government entities, and 30 speakers joined in the event and Pardepp Raj, Senior Incubation Centre- AIC RAISE delivered the vote of thanks.

PSG Allied Health Sciences 1st Graduation Ceremony

✍ The Covai Mail

The first Graduation Ceremony of PSG Allied Health Sciences program was held recently at PSG IMSR Auditorium.

Jeyachandran, Professor & Head, Biochemistry, I/c, AHS Program welcomed the gathering. The Chief Guest of the program was Prakash, Consultant Perfusionist and Head, Department of Clinical Perfusion, Narayana Hrudayalaya Institute of Cardiac Sciences, Bangalore.

He emphasized the need for teamwork approach and requested the students to keep up with the latest advancements, both in knowledge and skill domains.

The Managing Trustee, Gopalakrishnan presided over the function. He highlighted that India's healthcare industry is expected to grow to 4000 lakh crore rupees in size by 2025. Offering this felicitation, the Principal of the Institute SubbaRao said that 70% of new jobs in health care in the future would be for nurses, skilled technicians and technologists.

The Chief Guest Prakash along with the Managing Trustee Gopalakrishnan presenting Degree Certificate to a Graduate

Banumathi, Director, PSG Vishnugranthi, who initiated the Allied Health Sciences program requested the graduates to consider service as a priority. Manicka Vasuki Professor of Anatomy, Co-ordinator, AHS Program delivered the vote of thanks. About 110 graduates received their degree certificates.

Orion Innovation: Top Outsourcing Leader

✍ The Covai Mail

At the 2023 Global Outsourcing 100 list, the International Association of Outsourcing Professionals (IAOP) recognized Orion Innovation (Orion), a leading digital transformation and product development services company, as a Global Outsourcing Leader.

Orion has been included on the list for the past fourteen years, making this the seventh consecutive year. This list is a prestigious recognition that honours the world's top outsourcing companies for their commitment to excellence, innovation, and continuous improvement.

Judging is based on a rigorous scoring methodology and reviewed by an independent panel of IAOP customer members with extensive experience in selecting outsourcing service providers and advisors for their organizations.

Summer Swimming Coaching Camp at TNAU

✍ The Covai Mail

The Centre for Students Welfare organizes Summer Swimming Coaching Camp 2023, at Tamil Nadu Agricultural University, Coimbatore, recently. Geetha Lakshmi, Vice Chancellor inaugurated the coaching camp.

Maragatham, Dean, Centre for Students Welfare welcomed the gathering.

The camp is open from 6.00 am to 09.00 am untill May 20, 2023, with separate timing for women participants.

Deans, Directors, Professor and Head, Assistant Professor and all other teaching and non-teaching staff of TNAU attended the inauguration function. Around 200 students have enrolled their name for this summer swimming coaching camp and also their parents attended the function. Desiga Srinivasan proposed the vote of thanks.

Students undergoing swimming training at TNAU

PSG Expert advices on Asthma Day

✍ The Covai Mail

The Global Initiative for Asthma (GINA) organized World Asthma Day (WAD) on May 2, 2023, to spread awareness of the disease worldwide.

For World Asthma Day this year, GINA has chosen the theme "Asthma Care for All" and the message promotes the development and implementation of efficient asthma management programs in all resource nations.

"You can get asthma at any age," says Dr. Jayakumar, Pulmonologist & Sleep Specialist, PSG Hospitals, Coimbatore. "Although it cannot be cured, asthma can be controlled and is not contagious. The normal asthma side effects are cough, particularly at night and early morning associated with chest tightness and wheezing. The majority of asthma attacks are mild. In any case, those assaults can get intense, and individuals can die from a terrible one, particularly if not in regular treatment and follow-up."



Dr. Jayakumar,
Pulmonologist & Sleep Specialist PSG Hospital

He emphasized not to self-medicate for asthma, and visit a family doctor or pulmonologist to diagnose and manage asthma safely to lead a normal life.

He advises asthma patients to use their inhalers correctly and as prescribed, to visit their doctors at least once a year for check-ups, to request a written action plan from their doctors to know when their asthma is getting worse, and to avoid triggers like pollen, dust, and pets that initiates asthma attacks.

He also highlighted the two kinds of Asthma medicines i.e., Preventive medicines ("controllers") that protect the lungs & keep asthma attacks from starting and Quick-relief medicines ("relievers") that are used to relieve asthma symptoms when they occur.

VIMS organized an Online Expert Talk on IPR

✍ The Covai Mail

Vivekananda Institute of Management Studies (VIMS), Coimbatore, organized an Online Expert Talk on "IPR: Patent Evergreening" on Wednesday. Valarmathi Director – VIMS, delivered Felicitation Address and spoke on the importance of IPR in this competitive market.

Arun Kumar, Master Trainer, EDII, Government of Tamil Nadu was the Resource Person. He addressed on Introduction of Intellectual Property Rights (IPR) and its need. He said that the majority of applications for patents were filed in India by Foreign nations compared with China. He explained various types of IPR such as Patent, Trademark, Copyright, and Industrial Design with examples, Plant variety protection and Geographical Indications. He also suggested that a trademark will increase the company's value significantly and India is in the 40th spot in the Global Innovation Index based on 2023 data.

NIT becomes IPTIF- I-trend centre

✍ The Covai Mail

Nehru Institute of Technology (NIT) signed an MOU with IIT Palakkad - Technology iHub Foundation (IPTIF) and becomes an "IPTIF- I-trend centre" as Nodal Centre, recently. This MOU ceremony was held at IIT Palakkad T-iHub in the presence of Sivaraja Principal, NIT and Lavanya, Hub Manager, IPTIF. The essence of this MOU includes Internship, Product Development, Skill Development, Certification Courses, Start-ups and FDP etc.

(Left to right) Pathur Nisha, IQAC/ Head, NIT, Lavanya, iHub Manager-IIT- Palakkad-TIF, Sivaraja, Principal and Balthilak, IQAC/ Coordinator of NIT.

Riddhi 2023 - NGI's Offer letter distribution ceremony

✍ The Covai Mail

Riddhi 2023–offer letter distribution ceremony, the signature annual event of Nehru Group of Institutions was conducted at Shri PK Das Auditorium, Coimbatore, recently.

Ramesh Raja, Head, Nehru Corporate Placement & Industry Relation (NCP&IR) welcomed the gathering. Krishnakumar, CEO & Secretary, presided over the event.

Sriram, Vice President, Strategic Projects HR from Bosch Global Software Technologies Private Limited was the Chief Guest. He said that students should develop skills not only in their core field but also in other related fields.

In the current academic year, 180 + companies conducted a campus placement drive. Around 2300+ students were placed in companies like TCS, Tech Mahindra, ICICI Bank, City Union Bank, Bandhan Bank, etc., and received their offer letters in the ceremony.

The Chief Guest, Sriram along with the officials and the placed students of Nehru Group of Institutions.

Anirudhan, Principal, Nehru Arts & Science College, Maniiarasan, Principal Nehru Institute of Engineering & Technology, Moses Daniel, Principal, Nehru College of Management, Ravikumar, Principal, Nehru Institute of Information Technology & Management, Sivaraja, Principal, Nehru Institute of Technology and Balaji Dean, Nehru College of Aeronautics and Applied Science participated and felicitated the students.

Sivamani, Senior Manager, Corporate Relations, NCP&IR, NGI proposed the vote of thanks. Students from various colleges under the Nehru Group of Institutions and their parents attended the function.

1300+ Firms Hire NxtWave's Tech Talent

✍ The Covai Mail

NxtWave, a leading upskilling platform for software careers, announced that more than 1300 companies hired its learners over the period of last two years, further solidifying its position as a go-to destination for employers seeking top tech talent.

The students have been hired across multiple job roles ranging from Software Developer, Full Stack Developer to Data Engineer and Data Analyst.

Companies ranging from fast-growing startups to Fortune 500 giants like Accenture, Bank of America, Oracle, Cognizant and Goldman Sachs have hired NxtWave students, showcasing the platform's ability to cater to the varying needs of diverse organizations.

The startup is on track to create the largest pool of placement opportunities for software job aspirants by onboarding 10,000+ companies in the next 5 years.

India's First Anti-Ageing Dentistry Launched in Coimbatore

✍ The Covai Mail

India's First Anti-Ageing Dentistry, Shaad Aesthetics was launched in Racecourse, Coimbatore, recently.

Shaad Aesthetics offers an array of dental services that combine beauty with function, i.e., from smile redesign, dental implants, teeth whitening, porcelain veneers, and gum rejuvenation. The clinic ensures patients get the best dental care possible with a touch of sophistication and unparalleled confidentiality.

Dr. Arshad and his team of experts equipped with the most advanced tools and finest apparatus, design smiles that are proportional to patients' facial structure, shape, and shade in as few as 7 to 15 days, depending on the complexity.

Dr. Arshad in Shaad Aesthetics

Reg. No. TNBIL/2014/55455. Postal Registration No: CB/123/2021-23. Owned, Published and Printed by K.C.Srinivasan and published from 5/1, Athanur Amman Kovil Street, Ganapathy, Coimbatore - 641006 and Printed at Sri Saraswathy Printers, 5/1, Athanur Amman Kovil Street, Ganapathy, Coimbatore - 641006. Editor: K.C.Srinivasan

கல்வியில் சிறந்த கோவை

✍ ஆசிரியர், தி கோவை மெயில்

தமிழ்நாட்டின் தலைசிறந்த நகரம் என்று சென்னையைச் சொல்லலாம். அது பல நூறு ஆண்டுகளாக தொடர்ந்து தலைநகரமாக இருந்ததும், இந்திய அளவில் டில்லி, பம்பாய், கல்கத்தா ஆகியவற்றுடன் இணைந்து வளர்ந்ததும் அதன் வளர்ச்சிக்கு காரணங்களாக அமைகின்றன. ஆனால் கோவை அப்படி அல்ல. ஒரு மிகப்பெரிய கிராமம் போல இருந்த நிலை மாறி இருபதாம் நூற்றாண்டில் ஒரு தொழில் நகரமாக வளர்ச்சி பெற்றது. 21 ஆம் நூற்றாண்டில் சிறு தொழில் நகரமாக மாறியதோடு இன்று கல்வி, மருத்துவத் துறைகளிலும் வளர்ச்சி பெற்று திகழ்கிறது. அதிலும் குறிப்பாக பல்வேறு வகையான கல்வி நிலையங்கள் இங்கு அமைந்து தென்னிந்தியாவின் முக்கிய கல்வி மையங்களில் ஒன்றாக இந்த நகரம் திகழ்கிறது.

கோவை மாவட்டம் பிரிட்டிஷ் ஆட்சியில் கீழ் 1800 ஆம் ஆண்டு வந்தாலும் தற்போது நாம் காணும் இந்த நவீன "வகுப்பு" கல்வி முறை 1830களில் தான் அறிமுகமானது. அதற்கு முன்பு கல்வியறிவு பெறும் வாய்ப்பு எல்லோருக்கும் கிடைப்பது அரிதாகவே இருந்தது. அன்று தொடங்கி 100 ஆண்டுகளுக்குள் கோவையில் படிப்படியாக பள்ளிகள் உருவாகத் தொடங்கின. பிரிட்டிஷ் அரசின் நிர்வாகத்தை நடத்திட பணியாளர்கள் தேவை என்பதால் கல்வி வளர்ச்சியை ஊக்குவித்தது. அதன்படியே நகரம் சார்ந்த பகுதிகளில் இருப்பவர்கள், செல்வம் படைத்தோர் பள்ளி கல்லூரிகளில் சேர்ந்து கல்வி பயில தொடங்கினர்.

இருபதாம் நூற்றாண்டில் இந்த நிலை மாறத் தொடங்கியது. அந்தந்த பகுதிகளில் நல்ல மனமும், செல்வமும் படைத்த பெரியோர் பலர் கல்வி நிலையங்கள் தொடங்க உதவி புரிந்தனர். 1920க்கு பிறகு நகராட்சி, மாவட்ட கழகங்கள் ஆகியன பள்ளிகளை உருவாக்கின. கோவையின் கல்வி வளர்ச்சி இவ்வாறு வளர தொடங்கியது.

மேலும் கல்வி வளர்ச்சியை பொறுத்தவரை கூடுதலாக கோவைக்கு என்று சில சிறப்புகள் உண்டு. 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த தாமஸ் கல்வி வளர்ச்சியை ஊக்குவிப்பவராக இருந்தது இங்கு கல்வி வளர்ச்சிக்கு உதவியது. அன்று இருந்த லண்டன் மிஷன் சொசைட்டி பள்ளிகளை உருவாக்கியது. வீராசாமி முதலியார், மாரண்ண கவுடர், எஸ். பி. நரசிம்மலு நாயுடு போன்றோர் கல்வி வளர்ச்சியில் அக்கறை செலுத்தினர். அவர்களால் தொடங்கப்பட்ட பள்ளிகள் இப்பகுதி மக்களுக்கு கல்வி பெற உதவின.

அதன் பிறகு கல்வி வளர்ச்சியின் அடுத்த நிலை உருவாகத் தொடங்கியது. 1930 க்கு பிறகு தொழில் சார்ந்த கல்வி இப்பகுதியில் முக்கியத்துவம் பெற தொடங்கியது.

ஏழை மாணவர்களுக்கு தொழில் கற்றுக் கொடுப்பதற்காக இன்றைய மைக்கேல் பள்ளி எதிரில் ஒரு தொழில் பள்ளி தொடங்கப்பட்டது. அங்கு தச்சு வேலை போன்றவை சொல்லித் தரப்பட்டன. இதுதான் கோவையின் முதல் தொழிற்பயிற்சி பள்ளி ஐடிஐ என்று சொல்லலாம். அடுத்து கோவையின் தொழிற் வளர்ச்சிக்கு பலவகையிலும் காரணமான ஜிடி நாயுடு, சர் ஆர்தர் ஹோப் பாலிடெக்னிக் மற்றும் சர் ஆர்தர் ஹோப் பொறியியல் கல்லூரி ஆகியவற்றை தொடங்கினார். இவை கோவையில் முதல் பல் தொழில் பயிலகமாகவும், முதல் பொறியியல் கல்லூரியாகவும் மலர்ந்தன. பிறகு இவை அரசு கல்வி நிறுவனங்களாக மாறின. அதனை தொடர்ந்து பிஎஸ்ஜி அறநிலைய சர்வஜன பள்ளியில் தொடங்கி தொழில் பயிற்சிக்கான நிலையங்கள், பொறியியல் கல்லூரி, கலைக் கல்லூரி என்று நடத்த தொடங்கியது. கோவையில் மூன்றாவது பொறியியல் கல்லூரியான கோயம்புத்தூர் இன்ஸ்டிட்யூட் ஆஃப் டெக்னாலஜியும் தொடங்கப்பட்டது. கோவையில் இவ்வாறு மூன்று பொறியியல் கல்லூரிகள் இருந்த காலகட்டத்தில் தலைநகரான சென்னையில் 2 பொறியியல் கல்லூரிகள் இருந்தது குறிப்பிடத்தக்கது. கோவை பகுதி முழுவதும் தொடர்ந்து பல பள்ளிகளும், பாலிடெக்னிக்குகளும், பொறியியல் கல்லூரிகளும் தொடங்கப்பட்டன.

இதே காலகட்டத்தில் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கோவையில் விவசாய கல்லூரி தொடங்கப்பட்டு பல வகையிலும் வளர்ச்சி பெற்று 1970களில் அது ஒரு பல்கலைக்கழகமாக உருவெடுத்தது. அது சார்பான பல கல்லூரிகளும் தொடங்கப்பட்டன. அதே நேரத்தில் கோவையில் ஒரு வனக் கல்லூரியும் தொடங்கப்பட்டது. இன்று அது வனக்கல்லூரி என்பதோடு ஒரு பெரிய வனத்துறை சார்ந்த உயர் ஆய்வு மையமாகவும் இயங்கி வருகிறது. இந்திய நாட்டின் விடுதலைக்குப் பிறகு தொடங்கப்பட்ட அவிநாசிலிங்கம் மனையியல் கல்லூரி இன்று நிகர்நிலை பல்கலைக்கழகமாக மாறி உள்ளது. இதே காலகட்டத்தில் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டது. இன்று அதனை தொடர்ந்து பிஎஸ்ஜி மருத்துவ கல்லூரி, சமீபத்தில் கேஎம்சிஎச் மருத்துவக் கல்லூரி ஆகியனவும் இயங்கி வருகின்றன இதுபோக செவிலியர் கல்லூரிகளும், மருத்துவ துறை சார்ந்த பல கல்வி நிறுவனங்களும் இங்கு நடத்தப்பட்டு வருகின்றன.

கல்லூரிகளில் நடைபெறும் பஞ்சாலை சார்ந்த கல்வியோடு சித்ரா, சர்தார் வல்லபாய் பட்டேல் இன்ஸ்டிட்யூட் போன்றவை ஜவுளித்துறை சார்ந்த உயர்படிப்புகளை வழங்கி வருகின்றன. இவ்வாறு கல்வித்துறையின் பல்வேறு புலங்களில் கோவை சிறந்து விளங்குவதால் இன்று இந்தியா முழுவதும் உள்ள மாணவர்களும் பெற்றோர்களும் விரும்பி கல்வி கற்பதற்கு தேர்ந்தெடுக்கும் இடமாக கோவை மாநகரம் மாறி வருவது குறிப்பிடத்தக்கது



இந்துஸ்தான் கல்லூரி மாணவிக்கு சிறந்த என்.எஸ்.எஸ். தன்னார்வலர் விருது

விளையாட்டு நலத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் இருந்து விருதினைப் பெற்றுக்கொள்கிறார் மாணவி சுஹாசினி.

✍ தி கோவை மெயில்

நாட்டு நலப்பணித் திட்டம் சார்பாக சென்னை அண்ணா பல்கலைக்கழகம் விருது வழங்கும் விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் கோவை, இந்துஸ்தான் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி மாணவி சுஹாசினிக்கு சிறந்த நாட்டு நலப்பணித் திட்ட 2021-22 ஆம் ஆண்டிற்கான தன்னார்வலர் விருது வழங்கப்பட்டது.

இந்த சாதனையை, இந்துஸ்தான் என்.எஸ். எஸ். மாணவர்கள் தொடர்ந்து இரண்டாவது முறையாக படைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்துஸ்தான் கல்வி குழுமத்தின் சார்பாக கல்லூரியின் அறங்காவலர் சரஸ்வதி கண்ணையன், துணை அறங்காவலர் பிரியா சதிஷ் ஆகியோர் மாணவியைப் பாராட்டினர். இந்துஸ்தான் கல்வி குழுமத்தின் முதன்மை அதிகாரி கருணாகரன், கல்லூரி முதலவர் ஜெயா மற்றும் கல்லூரி என்.எஸ். எஸ். அதிகாரி பிரசன்ன வெங்கடேசன் ஆகியோர் வாழ்த்துத் தெரிவித்தனர்.

கே.பி.ஆர். கல்லூரி "சிறந்த செயல் திறனாளர்" விருது வென்று சாதனை

✍ தி கோவை மெயில்

கே.பி.ஆர். கலை, அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரியின் வணிகவியல் துறை கடந்த செப்டம்பர், அக்டோபர் 2022 ஆகிய இரு மாதங்களில் "ஜி.எஸ்.டி. பயிற்சியாளர்" குறித்த ஆறு நாள் மதிப்புக் கூட்டப்பட்ட பாடத்திட்டப் பயிற்சி வகுப்பினை இரண்டு தொகுதிகளாக நடத்தியது.

மாணவர்களைப் பாராட்டும் நோக்கில் இந்த படிப்புக்கான பயிற்சி மற்றும் சான்றிதழ் வழங்கும் விழாவை, சென்னையைச் சார்ந்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் அமைச்சகம், இந்திய சமூக அரசு, தொழில்நுட்ப மேம்பாட்டு மையம் அண்மையில் ஏற்பாடு செய்தது.

இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர் கீதா தலைமையுரை வழங்கினார். கோவை மண்டலப் பயிற்சி ஒருங்கிணைப்பாளர் ராஜேஷ்குமார் பழனிசாமி, பாடத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்த இக்கல்லூரியைச் சார்ந்த சுமார் 190 மாணவர்களுக்கு விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கினார்.

கே.பி.ஆர். கல்லூரி மாணவர் அருளாளன், கோயம்புத்தூர் மண்டல அளவில் (ஏப்ரல் 2022 டிசம்பர் 2022 பிரிவு) முதல் இடத்தினை பெற்றதோடு மட்டுமில்லாமல் "சிறந்த செயல் திறனாளர்" விருதும் வென்றார்.

மேலும் இந்த மையம், கே.பி.ஆர். கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரியின் சேவையைப் பாராட்டி ஒரு சிறப்பு விருதினையும் வழங்கி கௌரவித்தது. இந்நிகழ்வில் சுமார் 200 மாணவர்களும், 8 ஆசிரியர்களும் பயன்பெற்றனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம்

✍ தி கோவை மெயில்

மலேசியா நாட்டில் உள்ள ஐ.என்.டி.ஐ. சர்வதேசப் பல்கலைக்கழகத்துடன், கோவை நவ இந்தியாவில் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை, அறிவியல் கல்லூரி புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டது.

இவ்வொப்பந்தத்தில் எஸ்.என். ஆர். சன்ஸ் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் டி.லட்சுமி நாராயணசுவாமி, மலேசியா ஐ.என்.டி.ஐ. பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஜோசப் லீ ஆகியோர் கையொப்பமிட்டனர். இந்த ஐந்தாண்டு ஒப்பந்தத்தின் மூலம், 'இவ்விரு கல்வி நிறுவனங்களின் ஆசிரியர் மற்றும் மாணவர் பரிமாற்ற அடிப்படையில், இரு கல்வி நிறுவனங்களிலும் கற்றல், கற்பித்தல் முறைகளை நேரில் அறிதல், பாடத்திட்டங்களைப் பரிமாறிக் கொள்ளுதல், இரு கல்வி நிறுவனங்களிலும் ஆராய்ச்சித் திட்டங்களை மேம்படுத்துதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல், ஆராய்ச்சித் திட்டங்களை வெளியிடுதல், இரு கல்வி நிறுவனங்களும் இணைந்து பயிலரங்குகள், கருத்தரங்குகள், ஆய்வு மாநாடுகள் நடத்துதல், சுற்றுலா அனுபவங்களைப் பகிர்ந்துக் கொள்ளுதல்' ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன.

கே.பி.ஆர். கல்லூரியின் மாணவிக்கு தேசிய விருது

சிறந்த தன்னார்வலர் விருதினை மாணவி எஸ்.தனுஜாவுக்கு வழங்குகிறார் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்.

✍ தி கோவை மெயில்

அண்ணா பல்கலைக்கழகத்தின்கீழ் செயல்படும் பொறியியல் கல்லூரிகளின் தேசிய நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்கள் மற்றும் தன்னார்வ மாணவர்களில் 2021-22 ஆம் ஆண்டிற்கான சிறந்த சேவை புரிந்தோருக்கு விருது வழங்கும் விழா சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது.

சிறப்பு விருந்தினர் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சிறப்பாக செயல்பட்ட என்.எஸ்.எஸ். தன்னார்வலர்கள் மற்றும் திட்ட அலுவலர்களுக்கு பரிசு வழங்கினார். கே.பி.ஆர். பொறியியல் கல்லூரியைச் சேர்ந்த மாணவி எஸ்.தனுஜாவுக்கு தன்னார்வலர் விருதும், பி.அணில்குமாருக்கு சிறந்த திட்ட அலுவலர் விருதும் வழங்கப்பட்டது.

இதுகுறித்து கல்லூரி முதல்வர் மு.அகிலா கூறுகையில், 'மாணவர் தன்னார்வலர் மற்றும் திட்ட அலுவலர் ஆகியோரின் சிறப்பான பங்களிப்புக்காக விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. கே.பி.ஆர். பொறியியல் கல்லூரியின் தேசிய மாணவர் படை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இந்த விருது வரும் ஆண்டுகளில் கல்லூரியின் தேசிய மாணவர் படை மேலும் சிறப்பாக செயல்பட உத்வேகத்தை அளிக்கும்' என்றார்.

கே.ஜி. மருத்துவமனையின் ஆஸ்துமா தின விழிப்புணர்வுப் பேரணி

கே.ஜி. மருத்துவமனை மற்றும் ப்ரிஸ்டின் பியர் மருந்தகம் இணைந்து நடத்திய உலக ஆஸ்துமா தின விழிப்புணர்வுப் பேரணியை, கே.ஜி. மருத்துவமனைத் தலைவர் கே.ஜி.பக்தவத்சலம் தலைமை தாங்கி கொடியசைத்து துவக்கி வைத்தார். இப்பேரணி, கே.ஜி. மருத்துவமனையில் துவங்கி அவிநாசி சாலை வழியாக ரேஸ்கோர்ஸ் அடைந்து மீண்டும் மருத்துவமனையில் முடிவடைந்தது. கே.ஜி. மருத்துமனையின் மருத்துவர்கள், செவிலியர் துறை மாணவ, மாணவிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

டாக்டர் என்.ஜி.பி. கல்லூரியில் விருது விழா

✍ தி கோவை மெயில்

டாக்டர் என்.ஜி.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ஸ்ரீ நல்ல கவுண்டர் ஆராய்ச்சி மற்றும் கல்விசார் மேம்பாட்டுக்கான விருது வழங்கும் விழா கல்லூரியில் நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் சரவணன், விருது பெற்றவர்கள் விபரங்களை அறிவித்தார். டாக்டர் என்.ஜி.பி. கல்விக் குழுமங்களின் இயக்குநர் முத்துசாமி வாழ்த்துரை வழங்கினார். கோவை மருத்துவ மைய ஆராய்ச்சி மற்றும் கல்வி அறக்கட்டளையின் முதன்மை செயல் அலுவலர் ஓ.டி.புவனேஷ்வரன் தலைமையேற்றார்.

சிறந்த மாணவிக்கு ஸ்ரீ நல்ல கவுண்டர் ஆராய்ச்சி மற்றும் கல்விசார் மேம்பாட்டுக்கான விருதினை வழங்குகிறார் கோவை மருத்துவ மைய ஆராய்ச்சி மற்றும் கல்வி அறக்கட்டளையின் முதன்மை செயல் அலுவலர் ஓ.டி.புவனேஷ்வரன்.

கல்விசார் செயல்பாடுகள் மற்றும் ஆராய்ச்சிசார் செயல்பாடுகளில் சிறப்பாகச் செயல்பட்ட மாணவர்களுக்கும், பேராசிரியர்களுக்கும் விருது வழங்கப்பட்டது. டாக்டர் என்.ஜி.பி. கல்வி நிறுவனங்களில் 10, 15, 20க்கும் மேற்பட்ட ஆண்டுகள் பணியாற்றிய பேராசிரியர்கள், அலுவலர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

கருத்தடை சாதனங்கள் குறித்த கருத்தரங்கு

மகப்பேறுக்கு பிறகான தற்காலிக கருப்பையக கருத்தடை சாதனம் பொருத்தும் முறை மற்றும் அகற்றும் முறையை அறிந்துகொள்ளும் நோக்கில் கே.எம்.சி.எச். செவிலியர் கல்லூரியில் கருத்தரங்கு மூன்று நாள் நடைபெற்றது. கே.எம்.சி.எச். செவிலியர் கல்லூரி முதல்வர் மாதவி தலைமையுரை ஆற்றினார். கோவை மருத்துவக் கல்லூரியின் சமூக சுகாதார மருத்துவத் துறை துணைப் பேராசிரியர் டாக்டர் அபர்ணவி சிறப்புரை ஆற்றினார். சோமனூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின் மகப்பேறு மற்றும் குழந்தை நல மருத்துவர் டாக்டர் ஜானகி சிறப்பு செய்முறை வகுப்புகள் நடத்தினார், இதில் இளநிலை செவிலியர் நான்காம் ஆண்டு மாணவிகள் பங்கேற்றனர்.

GREEN PARK
CAREER ACADEMY
NEET / AIIMS / JIPMER

609, 3rd Floor, Avinashi Road, Opp.PSG Tech, Peelamedu,
COIMBATORE - 641 004.
Mobile : 99446 31172 | 76049 50938

Admissions Open!

NEET
LONG TERM 2024
(Repeaters)

Admissions Commence From	Classes Commence From
11th May 2023 (Thursday)	9th June 2023 (Friday)

NEET - 2022 ACHIEVEMENTS

MARK RANGE - 2022

700 And Above	650 And Above	600 And Above	550 And Above	500 And Above	450 And Above
01	50	252	634	1137	1765

No. Of Students joined MBBS in 2022 through Government Quota **1552**